28 AUG 198

1979 நவம்பர் 7]

இந்த மூன்று உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து அவர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியில் ஒரு விஷயத்தை மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை சொன்னார்கள். எந்த தேதியில் நிலுவை பாக்கி இருந்தது என்பதையும் சொன்னார்கள். இவர்கள் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு எந்த தேதியில் நீக்கப்பட்டார்கள் என்கிற விவரத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: 20—5—1979 ஆம் தேதியன்று கூட்டுறவு சங்க குழு கூடி நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதில் ஒருவர் மீது மட்டும் அந்தக் குழு நடவடிக்கை எடுத்த காரணத்தினால், அங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்க செயலாளர் மேலிடத்திற்கு தகவல் கொடுத்து, உரிய முறையில் கூட்டுறவுத் துறை அதில் தலையிட்டு 10—9—1979 அன்று மூன்று உறுப்பினர்கள் மீதும் கூட்டுறவு சங்க விதி 40-ன் கீழ் கும்பகோணம் கூட்டுறவுச் சங்க துணை பதிவாளர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த மூன்று பேரும் இன்றைக்கு பொறுப்பிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கூட்டுறவுச் சங்கங்களில் கணக்குகள் தணிக்கை.

*105 **திரு. நா. பழனிவேல்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு சங்க கணக்குகளை தணிக்கை செய்ய தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: கூட்டுறவு சங்கக் கணக்குகளை தணிக்கை செய்ய, கூட்டுறவுத் தணிக்கைத் துறை என்ற ஒரு புதிய துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

[1979 நவம்பர் 7

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய ஆட்சேபணை அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருக்குமானால் ஆட்சேபணையிலுள்ள விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்களின் கீழ் நிர்வாகப் பிரிவு, தணிக்கைப் பிரிவு என்று தனித்தனியாகப் பிரித்து, கூட்டுறவுத் தணிக்கைப் பிரிவு தனித் துறையாக இயங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதன் மீது திரு. ஆர். கேசவன், கூட்டுறவு சார்புப் பதிவாளர் உயர்நீதி மன்றத்தில் இந்த அரசு ஆணையை எதிர்த்து ஒரு ரிட் மனு செய்துள்ளார். உயர்நீதி மன்றம் இந்த ரிட் மனுவை 24—10—1979 அன்று எடுத்துக்கொண்டு, திரு. கேசவன், மனுதாரரைப் பொறுத்தவரை தடுப்பு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ரிட் மனுவின் பேரில் கூட்டுறவு சங்கப் பதிவாளரை அரசு குறிப்பு கேட்டுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் அதிகப் படியாக கணக்குகளை தாக்கல் பண்ணுவதில் மோசடி நடந்து வருகின்றது என்பது அரசுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் படியான இந்த தனி தணிக்கைப் பிரிவு, இப்போது சகல கூட்டுறவு சங்கங் களிலுமுள்ள கணக்குகளை வருஷா வருஷம் தணிக்கை செய்யக்கூடிய பிரிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளதா அல்லது ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று குற்றச் சாட்டுக்கள் வந்துள்ள கூட்டுறவு சங்கங்களைத் தணிக்கை செய்யக்கூடிய வகையிலே ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற குறைபாடு களையும், மற்ற ஊழல்களையும் கண்டுபிடிப்பதோடு மட்டுமல்லாமல், இதனை கொள்கை பிரச்சினையாக, இனி கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் நிர்வாகப் பிரிவு தனியாகவும், தணிக்கைப் பிரிவு தனியாகவும் பிரிக்கப்பட்டு, இந்தத் தணிக்கைப் பிரிவுக்கு, இந்தப் புதிய துறைக்கு ஒரு தலைவர் அதாவது ஒரு ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.ஏ. அண்டு ஏ.எஸ். அல்லது தமிழக அரசு அதிகாரி ஒருவர் வசதிக்கேற்ப நியமிக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவுத் துறைத் தலைவருக்கு கூட்டுறவு சங்க சட்டத்தின் விதி 64, மற்றும் துணை விதிகள் 54, 55-ன் கீழ் அதிகாரம் வழங்கப்படும். தற்போது கூட்டுறவு தணிக்கைத் துறை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது.

1979 நவம்பர் 7]

திரு. பண்ணை கே. சேதுராம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்களிலும், வங்கிகளிலும் பண மோசடிகள் நடந்து பல ஆண்டுகளாக இந்தக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வந்துள்ளது. சில தணிக்கை பல ஆண்டுகளாக தணிக்கை செய்யப்பட்டதால், காலாவதியாகி விட்டது என்று தெரிய வருகிறது. அப்படிக் காலாவதியாகியுள்ள தணிக்கைகளையெல்லாம், மறுபடியும் மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரமாக அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய விதிகள் ஜனநாயக முறைக்கு ஒவ்வாமல் இருப்பதினால், விரும்பினால் அதிகாரிகள் சலுகைகள் காட்டவும், அவர்கள் விரும்பவில்லை என்றால் பயங்கரமான சர்வாதிகார முறையில் நடந்துகொள்ளும் முறையில் விதிகள் இருக்கின்றன. அவைகளை மாற்றி, ஜனநாயக முறைக்கு ஏற்ப, இந்த விதிகளைத் திருத்தி, ஊழல்கள் நடக்காமல், அதிகாரிகள் பயமுறுத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடியார் கேள்விக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், தவறு செய்யக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய காலத்தில் செல்வாக்குப் படைத்தவர்களுக்கு, சிபார்சு உள்ளவர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாமலும், அப்படிச் செல்வாக்கு இல்லாதவர்கள் சின்ன தவறு செய்தாலும், கடினமான தண்டனை விதிக்கக்கூடிய அளவுக்கும் உள்ளது. அதிக தண்டனை அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, 6 மாத காலத்திற்குள்ளோ அல்லது ஒரு வருஷத்திற்குள்ளோ அதற்கு தீர்வு காண வேண்டும். அப்படியில்லாமல், 10 வருஷம், 15 வருஷம், 20 வருஷம் என்று நீட்டிக்கக்கூடிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி என்ன என்பதைப் படித்தீர்களா ?

திரு. வி. கே. கோதண்டராமன் : அக் கேள்வி சம்பந்தப்பட்டதுதான். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இந்த நடவடிக்கைகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். தவிர, குறுகிய காலத்திலே நடவடிக்கை எடுக்கின்ற அளவிலே நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனை அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த முறையை எதிர்த்து ஒரு அதிகாரி உயர்நீதி மன்றத்திற்குப் போயிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் என்ன காரணத்தைச் சொல்லி எதிர்க்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கும் மனுதாரர் இதனை இரண்டாகப் பிரிக்கக் கூடாது என்ற அடிப்படையில், அவர்களுக்கு குறிப்பாக வேலை வாய்ப்பு இழக்கப்படும் என்ற ஒரு அச்சத்தில் அவர்கள் சென்றிருக்கிறார்கள். ஆனால் வேறு பல நியாய மான, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும், ஊழலற்ற ஒரு நிலைமையைக் கூட்டுறவுத் துறையில் உருவாக்க வேண்டுமென்ற விழுமிய நோக்கத்திற்காக அரசு இந்த முயற்சியை எடுத்திருக்கிறது. அது இன்றைய தினம் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால் அதிக அளவு அதைப் பற்றி நான் விளக்க விரும்பவில்லை.

அரசு அலுவலகங்களுக்கு கட்டிடங்கள்.

***வினா எண் 121—திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்ட இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்ன ?